ஆகவே, நீங்கள் கிரிமினல் வழக்குத் தொடருவதற்கு அரசுக்குக் கோரிக்கை விட்டிருக்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே** நீங்கள் நடவடிக்கையை-- ஒழுங்கு நடவடிக்கையை--எடுத்தால்தான் தமிழ்நாட்டு மக்களுக்கு நியாயம் எது என்பது நன்றாகப் புரியும். அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவரை உடனே கைது செய்ய வேண்டும். காவலர்களைத் தாக்கிய எதிர்க்கட்சித் தலைவரையும், மற்ற உறுப்பினர்களையும் . கைது செய்ய அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டு மக்கள் மனநிம்மதி அடைவார்கள் என்று உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சஞ்சய் ராமசாமி. (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. துரை ராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, **என்று சொல்கிறார். அந்த வார்த்தை வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்** என்கிறார் என்றால், அவர் சொன்னதைப் போல இரண்டு நடவடிக்கை எடுக்க முடியாது. அதைத்தான் அவர் சொல்கிறார். (குறுக்கீடு) உங்கள் மேலே இரண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. (குறுக்கீடு) ஒரே நடவடிக்கைதான். ஒரே கிரிமினல் நடவடிக்கைதான், உங்கள் மேலே. அவை உரிமை மீறல் பிரச்சினையாக உங்கள் மீது எடுக்கவில்லை. சட்டமன்ற விடுதியில் நடைபெற்ற சம்பவத்திற்குக் கிரிமினல் நடவடிக்கை மட்டும்தான் எடுக்கப்பட்டது. இங்கே அவை உரிமை மீறலாக எடுக்கவில்லை. ஒன்றுமட்டும்தான் எடுக்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

5. 30.3.95 ஆம் நாளன்று உறுப்பினர்களைத் தாக்கிய ஒரு உறுப்பினர் மீது அறிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து

திரு. சஞ்சய் ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களைத் தாக்கியதற்காக நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள். ஆனால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களான திரு. கே. கே. சின்னப்பன் அவர்களையும், சிங்காரம் அவர்களையும் தாக்கியதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் இந்த செஷன் முழுவதும் நீக்கப்படவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் சில பத்திரிகைகளில், நாங்கள் இந்தப் பிரச்சினைகளில் கலந்து கொண்ட நோக்கத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். அதாவது, ஒரு கட்சி எங்களைத் தூண்டிவிடுவதாக அதிலே எழுதி இருக்கிறார்கள். நாங்கள் கேட்கவேண்டியதெல்லாம், எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்லாமல் அந்த எதிர்க்கட்சியில் இருக்கிற சில உறுப்பினர்கள் தேசப்பிதாவைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி சிங்காரம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இப்போது நீங்கள் சொன்னதற்கு நான் சொல்லிவிடுகிறேன். திரு. சின்னப்பனைத் தாக்கியதற்கு உடனடியாக எனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி நேற்றே அவரை வெளியேற்றிவிட்டேன். இந்த செஷன் முழுவதும் வெளியேற்றப்பட வேண்டுமானால் ஏற்கெனவே இன்னொரு பிரச்சினையில், நான் தெரிவித்ததைப் போல அதற்குப் பேரவைதான் ஒரு முடிவு எடுக்கவேண்டி வரும். அவரே இரண்டாவது முறையும் இந்த மாதிரி நடந்து கொள்வாரானால், எனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த செஷன் முழுவதும் வராமல் தடுக்க முடியும். எனவே, போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிங்காரம் அவர்கள் சொல்லிவிட்டார்கள்; உட்காருங்கள்.

6. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதியில் உள்ள அறைகளில் தங்கியுள்ளவர்கள் குறித்து உறுப்பினர்கள் அனுமதியின்றி ஊழியர்கள் விசாரித்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் காவலர்களை செக்யூரிட்டி பாதுகாப்பிற்காக எப்போதும் போடுவது என்பது வழக்கம். காரணம் என்னவென்றால், சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுடைய உறவினர்கள், மற்றவர்கள், பொதுமக்கள் எல்லோரும் வந்து அவர்களைச் சந்திக்கிற காரணத்தால், ஏதாவது பதட்டம் ஏற்படக்கூடாது என்பதற்காக அத்தகைய

LEGISLATIVE TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்